செ.வெ.எண்: 723 நாள்: 25.10.2019

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு 18 பயனாளிகளுக்கு ரூ.33.26 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் இன்று (25.10.2019) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

தமிழக அரசு விவசாயிகளின் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் குறைகளை போக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டத்தின் கீழ் குளங்கள் தூர்வாரப்பட்டு, தற்பொழுது பெய்துவரும் மழைநீர் வெகுவாக சேமிக்கப்பட்டுள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் மிக நீண்ட நாள் கோரிக்கையான காவிரி- வைகை- குண்டாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இத்திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தின் எதிர்கால தலைமுறைக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் 8 லட்சம் எண்ணிக்கையில் பனை விதைகள் விலையில்லாமல் அரசு சார்பில் நடப்பட்டு வருகிறது. மேலும் மிக விரைவாக வளரும் 2 லட்சம் மரங்கள் நடவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கஜா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கட்டி தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் வகையில் ரூ.640 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு காவிரி குடிநீர் மற்றும் அம்மையாப்பட்டி போன்ற பகுதிகளிலிருந்து சீரான குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று புதுக்கோட்டை நகராட்சிக்கு 2050 ஆம் ஆண்டு வரை குடிநீர் வழங்கும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ரூ.513 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் காய்ச்சலுக்காக பிரத்யேகமாக தனி வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. தீபாவளி கொண்டாடும் போது பொதுமக்கள் மிகுந்த கவனமுடன் தீ காயம் ஏதும் ஏற்படாதவாறு கொண்டாட வேண்டும். தவறுதலாக ஏற்படும் தீ காயத்தின் மீது சுத்தமான நீரை வைத்து சுத்தம் செய்ய வேண்டும். தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் தீபாவளி பண்டிகைக்காக சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் முழுநேரத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இதனை தொடர்ந்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றை பெறுதலுக்கான வழிமுறைகள் குறித்த துண்டுபிரசுரம், மடிப்பேடு, கையேடுகளை விவசாயிகளுக்கு வழங்கினார். மேலும் வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 4 குழுக்களுக்கு டிராக்டர்களை ரூ.32 லட்சம் மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 6 விவசாயிகளுக்கு ரூ.68,000 மதிப்பில் இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 8

பயனாளிகளுக்கு 58,000 மதிப்பீட்டில் என ஆக மொத்தம் 18 பயனாளிகளுக்கு ரூ.33.26 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் காளிதாசன், வேளாண் இணைஇயக்குநர் சுப்பையா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அருணாசலம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**